# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.263/2015

வா.சா.1– குறுக்கு விசாரணை – நாள் 15–07–2026.

பெயர் = சுந்தரமூர்த்தி

வா.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் கு.வி.–

(1) நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயம் செய்கிறேன். நான் தாக்கல் செய்த சீர்திருத்த பிராதில் GR சர்வே எண்.140/13 என திருத்தம் செய்துள்ளேன் அதுதான் தாவாச்சொத்தா என்றால் எனக்குத் தெரியாது. எனது மனைவி கிழமேல் எத்தனை அடி கிரையம் வாங்கியுள்ளார் என்றால் 59 அடி வாங்கியுள்ளார். எனது மனைவி கிரையம் வாங்கிய இடத்தில் எந்த பகுதியில் வீடு கட்டியுள்ளோம் என்றால் கிழக்கு பகுதியில் வீடுகட்டியுள்ளோம். எந்த வருடம் வீடு கட்டப்பட்டது என்றால் 2011ல் கட்டினோம். பஞ்சாயத்தில் பிளான் வாங்கினோமா என்றால ஆமாம். அந்த பிளான் எங்கள் கைவசம் உள்ளதா என்றால் ஆமாம். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியாது. நீதிமன்றத்தில் அடுத்த வாய்தாவில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் ஆமாம் என சாட்சி கூறுகிறார். எங்கள் வீட்டிற்கும் கிழக்கே கிரியன் செட்டியார் வீடு உள்ளது. கிரியன் செட்டியார் வீட்டிற்கும் எங்கள் வீட்டிற்கும் இடையே 3 அடி சந்து உள்ளதா என்றால் இல்லை. எங்கள் வீட்டிற்கும் கிழக்கே எங்களுக்கு கிடையாது. எங்கள் வீட்டின் கிழக்குசுவரில் எத்தனை ஜன்னல் வைத்துள்ளேன் என்றால் 2 ஜன்னல். எத்தனை அடி ஜன்னல் என தெரியாது. நான் மருத்துவபராமரிப்பில் இருந்து வருகிறேனா என்றால் ஆமாம் நரம்புதளர்ச்சி உள்ளது.

(2) எத்தனை வருடமாக நரம்புத்தளர்ச்சி உள்ளது என்றால் 10 வருடமாக என சாட்சி கூறுகிறார். எங்கள் வீட்டிற்கும் கிழக்கே எங்களுக்கு 1.1/2 இடம் உள்ளது என்றால் சரிதான். சர்வேயர் வந்து அளக்கும்போது எங்கள் வீட்டிற்கு கிழக்கே எத்தனை இருப்பதாக அளந்து

காண்பித்தார் என்றால் அது எனக்குத் தெரியாது. கிழமேல் எத்தனை அடி வீடு கட்டியுள்ளேன் என்றால் 2 செண்டில் வீடுகட்டியுள்ளேன் கிழமேல் 36 அடி தென்வடல் 28 அடி என சாட்சி கூறுகிறார். என் மனைவி வாங்கிய கிரையப்பத்திரத்தில் அடியளவுகள் குறிப்பிடவில்லை செண்டு அளவு குறிப்பிட்டுதான் வாங்கியுள்ளோமா என்றால் அது எனக்குத் தெரியாது. வழக்கு விவரம் என் மனைவிக்குத்தான் தெரியுமா என்றால் தெரியும். கிழமேல் எத்தனை அடி அளவிற்கு வழக்கு போட்டுள்ளோம் என்றால் 9 அடிக்கு வழக்கு போட்டுள்ளோம். என் வீட்டிற்கு மேற்கே எத்தனை அடி காலியிடம் உள்ளது என்றால் தெரியாது. பிரதிவாதிகள் மேற்கு பக்கம் வேலி போட்டு எத்தனை வருடம் இருக்கும் என்றால் 10 வருடம் இருக்கும். வேலி போடும்போது நான் தடுத்தேனா என்றால் ஆமாம். அதன்பிறகு தான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என சாட்சி கூறுகிறார். காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் ஆமாம். பந்தல்குடி காவல்நிலையத்தில் கொடுத்தோம். போலீசார் வழக்கு எடுக்கவில்லை. நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கு எத்தனை நாட்களுக்கு முன்பாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் வேலி போட்ட அன்றே புகார் கொடுத்துவிட்டோம். காவல்நிலையத்தில் வழக்கு போடவில்லை என காவல் கண்காணிப்பாளரிடம் மனு கொடுத்தோமா என்றால் இல்லை. என் மனைவிக்கு 60 வயதாகிறது.

(3) என் மனைவிக்கு கால்வலி, எலும்பு தேய்மானம் உள்ளது. மருத்துவசிகிச்சை எடுத்துவருகிறார். என் மனைவி மருத்துவசிகிச்சை எடுத்துவருவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நீதிமன்றம் கேட்டால் தாக்கல் செய்கிறேன் என சாட்சி கூறுகிறார். என் மனைவி வந்து சாட்சியம் அளித்தால் உண்மையை சொல்லிவிடுவார் என்பதற்காக நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதிகள் கட்டியுள்ள ஆஸ்பெஸ்டாஸ் கட்டிடத்தை இடித்து சுவாதீனம் கேட்டு பரிகாரம் கோருகிறேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் எத்தனை அடி கிழமேல் கட்டிடம் கட்டியுள்ளனர் என்றால் கிழமேல் 9 அடி தென்வடல் 14 அடி கட்டியுள்ளனர். மீதி இடம் வடக்கே உள்ளது. மேற்படி கட்டிடம் கட்டி 20 வருடம் இருக்குமா என்றால் வழக்கு தாக்கல் செய்தபிறகு தான் அந்த கட்டிடத்தை கட்டினார்கள் என சாட்சி கூறுகிறார். அந்த கட்டிடத்தை எடுக்க சுவாதீனம் கொடுக்க பரிகாரம் கேட்டுள்ளேனா

என்றால் ஆமாம். நான் சொல்வதுபோல் பரிகாரம் எதுவும் கேட்கவில்லை என்பதால் என் வழக்கு சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 பத்திரத்தை என் மனைவிக்கு கிரையம் கொடுத்தது யார் என்றால் குருசாமி. மேற்படி குருசாமியும், நாங்களும் ஒரே சமுதாயத்தை சேர்ந்தவர்களா என்றால் இல்லை. வா.சா.ஆ.1ல் லிங்காபுரம் கிராம களத்திற்கும் கிழக்கு என நான்குமால் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்குத் தெரியாது. கிரியன் செட்டியார் எங்கள் இடத்திற்கும் கிழக்கே உள்ள சொத்தை கிரையம் வாங்கினாரா என்றால் எனக்குத் தெரியாது. தெற்குமாலில் சுப்பன்செட்டியார் காலியிடம் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

(4) சுப்பன்செட்டியார் வகையறா உறவின்முறை மீது வழக்குதாக்கல் செய்தார்களா என்றால் ஆமாம். அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு மேல்முறையீடு செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் சொத்தை பார்வையிட்டாரா என்றால் ஆமாம். எங்கள் வீட்டிற்கும் வடக்கே ஓடை உள்ளது. ஆணையர் பார்வையிட்டபோது கிழமேல் 59 அடி தென்வடல் 28.1/4 அடி அளந்து காண்பித்தோமா என்றால் ஆமாம். தென்வடல் எவ்வளவு காலியிடம் உள்ளது என எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.1ல் தாவாச்சொத்து பூர்வீகச்சொத்து என காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். குருசாமியின் தந்தை பெயர் அழகர் ஆசாரி என்றால் சரிதான். அழகர் ஆசாரிக்கு அந்த சொத்து பூர்வீகபாத்தியம். அழகர் ஆசாரியின் தந்தை பெயர் தெரியாது. வா.சா.ஆ.1ல் கூடுதலாக அடியளவு காண்பித்து கிரையம் வாங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. குருசாமியும் அவர்கள் வீட்டில் யாரும் பாகம்பிரித்துக்கொண்டார்கள் என்றால் எனக்குத் தெரியாது. குருசாமியின் உடன்பிறந்தவர்கள் விவரம் எனக்குத் தெரியாது. குருசாமியும் அவர் உடன்பிறந்தவர்களும் பாகம்பிரித்த விவரம் எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். குருசாமிக்கு தாவாச்சொத்தில் எவ்வித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் பிரதிவாதிகள் உறவின்முறை தலைவர் ராமசாமி வகையறா ஒரு தரப்பினரா என்றால் தெரியாது. வா.சா.ஆ.1 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தக்கூடியதல்ல அது மோசடியாக எழுதிவாங்கப்பட்டது என்றால் சரியல்ல.

(5) வா.சா.ஆ.2 பட்டா மாறுதல் உத்தரவு எந்த வருடம் வாங்கப்பட்டது என்றால் 2002ல் வாங்கப்பட்டது. எத்தனை சதுரமீட்டருக்கு பட்டா வாங்கப்பட்டது என்றால் 3.3/4 செண்டிற்கு வாங்கினோம். பட்டா வாங்குவதற்கு மனு கொடுத்தோமா என்றால் தானாக பட்டா மாறியது என சாட்சி கூறுகிறார். அதற்கு முன்பு யார் பெயரில் பட்டாஇருந்தது என்றால் குருசாமி பெயரில் இருந்தது. அந்த பட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. குருசாமி பெயருக்கு எந்த ஆண்டும் பட்டா இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2ல் சொல்லப்பட்டுள்ள ராமசாமி, வேலுச்சாமி ஆகியோர்கள் யார் என்றால் வேறு தரப்பினர்கள் என சாட்சி கூறுகிறார். எங்கள் வீட்டிற்கும் மேற்கே இருக்கிறார்கள். வா.சா.ஆ.3ன் படி மேற்கே எத்தனை அடி கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.3ல் உள்ள வழக்கில் எங்கள் வீட்டை நான்குமாலில் காண்பித்துள்ளார்களா என்றால் ஆமாம். அந்த வழக்கு தள்ளுபடியாகிவிட்டது என்றால் ஆமாம். வா.சா.ஆ.3ல் உள்ள சொத்து எங்குள்ளது என எனக்குத் தெரியாது. எங்கள் சொத்திற்கும், ராமசாமி, வேலுச்சாமி சொத்திற்கும் இடையே தென்வடல் நடைபாதை உள்ளதா என்றால் தெரியாது. அழகரக்காள் யார் என்றால் தெரியாது. வா.சா.ஆ.3ல் சொல்லப்பட்டுள்ள சொத்தே ஊரில் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3ல் உள்ள ராமசாமியின் தாயார் பெயர் சுப்பம்மாளா என்றால் சரிதான். சுப்பன்செட்டியார் யார் என்றால் எனக்குத் தெரியாது. சுப்பன்செட்டியார் அப்பா பெயர் கந்தசாமி.

(6) வா.சா.ஆ.3ல் உள்ள வழக்கு தள்ளுபடியாகிவிட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 என் வீட்டிற்கு போடப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.5ல் உள்ள விவரம் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். சின்னச்சோலை என்ற செல்லத்தாய் குருசாமி என்பவருக்கு எழுதிக்கொடுத்த பத்திரம் என்றால் சரிதான். வா.சா.ஆ.5ல் 3வது லக்கச்சொத்தில் கிராம பொதுநிலத்திற்கும் கிழக்கு என மால் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்குத் தெரியாது. பெரியஅழகர்சாமி இடத்திற்கும் மேற்கு என மால் காண்பிக்கப்பட்டுள்ளது அவர் எனக்குத் தெரியாது. கிழமேல் பாதைக்கும் வடக்கு என போடப்பட்டுள்ளது அந்த இடம் எங்குள்ளது என எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.5ன்படி 3வது லக்கச்சொத்தில் எத்தனை அடி கிரையம் வாங்கப்பட்டது என எனக்குத்

தெரியாது. கிழமேல் 33 அடி தென்வடல் 21 அடி வா.சா.ஆ.5 ன்படி குருசாமிக்கு பாத்தியம் என்றால் சரியல்ல. நாங்கள் கூடுதலாக அடியளவுகள் காண்பித்து மோசடி பத்திரம் உருவாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல. என் மனைவி பெயரில் உள்ள பட்டா வா.சா.ஆ.6 என்றால் சரிதான். மேற்படி பட்டா மாறுதல் உத்தரவு 140/1பி 11.06.2025ல் ஏற்பட்டது என்றால் சரிதான். உட்பிரிவு செய்வதற்கு முன்பு பட்டா 24 மனை தெலுங்கு செட்டியார்கள் உறவின்முறை பெயரில் இருந்தது என்றால் சரியல்ல. உட்பிரிவுக்கு முன்பு முன்பட்டாதாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பினார்களா என எனக்குத் தெரியாது.

(7) இவ்வழக்கு 10 வருடங்களாக நிலுவையில் உள்ளது என்ற விவரத்தை தாசில்தாரிடம் சொன்னோமா என்றால் இல்லை. நான் இந்த வழக்கு விவரத்தை மறைத்து வா.சா.ஆ.6 மோசடியாக வாங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 என் வீட்டிற்கான சொத்துவரி ரசீது என்றால் சரிதான். வீட்டிற்கு எந்த வருடம் மின்இணைப்பு வாங்கினோம் என்றால் 2011ல் வாங்கினோம். என் வீட்டிலுள்ள மின்இணைப்பிற்கான ரசீது வா.சா.ஆ.8 என்றால் சரிதான். தாவாச்சொத்து குருசாமி என்பவருக்கு பூர்வீக பாத்தியப்பட்டது என்று எதனடிப்படையில் சொல்கிறேன் என்றால் அவரது தாத்தா பெயரில் SLR ஆவணம் உள்ளது. குருசாமியின் தாத்தா பெயர் என்ன என்றால் பக்கிரி ஆசாரி. அந்த SLR ஆவணம் கையில் உள்ளதா என்றால் ஆமாம். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். நான் சொல்வதுபோல் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் மனைவி வாங்கிய கிரையப்பத்திரத்தின் மேற்கு மாலில் லிங்காபுரம் கிராம இடம் என சொல்லப்பட்டுள்ளதா என்றால் ஆமாம் தவறாக காண்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி விவரம் எப்போது தெரியவந்தது என்றால் வா.சா.ஆ.1 ஏற்பட்ட இரண்டு வருடம் கழித்து தெரியவந்தது. சீர்திருத்த பத்திரம் எதுவும் போட்டேனா என்றால் இல்லை. 1 செண்டு எத்தனை சதுரடி என எனக்குத் தெரியாது.

(8) வா.சா.ஆ.1ல் மேற்குமால் தவறாக காண்பிக்கப்பட்டுள்ளது என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டபிறகு கிழமேல் அடி 22 என இருந்தது அதனை

8 அடி என திருத்தம் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஆணையர் சொத்தை அளந்து காண்பிக்கும்போது கிழமேல் 7 அடி இருந்ததாக சொன்னார் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் எத்தனை முறை தாவாச்சொத்தை பார்வையிட்டார் என்றால் 3 முறை பார்வையிட்டார். என்னிடம் காண்பிக்கப்படுவது ஆணையர் 17.02.2026 ல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் என்றால் சரிதான். அது **நீ.ம.சா.ஆ.1, நீ.ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 20.03.2023 ல் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள மெமோ **நீ.ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 24.11.2015 ம் தேதிய ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் **நீ.ம.சா.ஆ.4, 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடைசியாக நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்யும்போது கிழமேல் 7 அடி தான் அளந்து காண்பித்தார் என்றால் சரியல்ல. ஆணையர் அறிக்கைக்க விரோதமாக பிராதை சீர்திருத்தம் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 2015 ல் தாக்கல் செய்த ஆணையர் அறிக்கை, வரைபடத்தின்படி கிழமேல் 7 அடி என காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நிரூபணவாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும் என்றால் சரிதான்.

(9) நிரூபணவாக்குமூலம் பாரா–4 ல் பிரதிவாதிகள் ராமசாமி வகையறா இடத்தையும் ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டியுள்ளனர் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பாரா–6 ல் தாவாச்சொத்தில் கட்டிடம் எதுவும் கட்டவில்லை தாவாச்சொத்து காலியிடமாக உள்ளது என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் தாவாச்சொத்தில் ஆஸ்பெஸ்டாஸ் கட்டிடம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கட்டிடம் வழக்கிற்கு ஒருவருடத்திற்கு முன்பு கட்டப்பட்டது என்றால் சரியல்ல வழக்கிற்கு பிற்பாடு கட்டப்பட்டது. உறவின்முறைக்கு பாத்தியமான இடத்தில் 06.07.1949 கிரையப்பத்திரத்தின்படி பாத்தியம் கோருகிறார்கள் என்றால் அது எனக்குத் தெரியாது. அவர்கள் கிழமேல் 135 அடிக்கு உரிமைகோருகிறார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் கட்டியுள்ள மண்டபத்திற்கு மேற்கே ரோடு உள்ளதா என்றால் ஆமாம். முன்பு ஒடுங்கலாக ரோடு இருந்தது தற்போது அகலப்படுத்தியுள்ளார்கள் என சாட்சி கூறுகிறார். ரோடு இடத்தில் உறவின்முறைக்கு உரிமை உள்ளதா என்றால் எனக்குத் தெரியாது. பிரதிவாதிகள் கிரையம் வாங்கிய

இடத்திற்கும் கிழக்கே அழகர்ஆசாரி இடம் இருப்பதாக மால் காட்டியுள்ளார்கள் என்றால் சரிதான். 21.07.1994ம் தேதிய கிரையப்பத்திரம் மூலம் குருசாமிக்கு தாவாச்சொத்து பாத்தியம் என சொல்லியுள்ளேன் என்றால் அது எனக்குத் தெரியாது. சின்னஅழகர்சாமி, பெரிய அழகர்சாமி யார் என எனக்குத் தெரியாது.

(10) 1994ம் வருடம் பத்திரத்தில் உள்ள சொத்தும் அதற்கு வடக்கேயும், மேற்கேயும் உள்ள சொத்தும் சேர்த்து தான் 1666.3/4 சதுரடி இடம் என்றால் சரிதான். வா.சா.ஆ.5ல் பெரியஅழகர்சாமி காலி இடத்திற்கும் மேற்கு சின்ன அழகர்சாமி காலி இடத்திற்கும் தெற்கு என மால் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பெரியஅழகர்சாமி, சின்ன அழகர்சாமி, குருசாமி ஆகியோருக்கு என்ன உறவு என்றால் பங்காளிகள். 2ம் பங்காளியா, 3ம் பங்காளியா என்றால் ஒன்றுவிட்ட பங்காளிகள். மேற்படி மூவருக்கும் உள்ள உறவுமுறை என்ன என எனக்குத் தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் கூடுதலாக அடியளவு காண்பித்து கிரையம் பெற்றுவிட்டு மோசடியாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு எவ்வளவு வருடத்திற்கு முன்பு பூமிபூஜை கொண்டாடினார்கள் என்றால் நான் வெளிநாட்டில் இருந்தேன். 2015ல் ஏப்ரல் மாதம் ஊருக்கு வந்தேன். வழக்கு பிரச்சனைக்கு முன்பாகவே வந்துவிட்டேன். பாஸ்போர்ட் உள்ளதா என்றால் ஆமாம். அதனை பார்த்தால் நான் எப்போது இந்தியா வந்தேன் என தெரியும் என்றால் சரிதான் வழக்கு தாக்கல் செய்த காலத்தில் நான் இந்தியாவில் இருந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நானும் பிரதிவாதிகளும் ஒரே சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் உறவின்முறையில் நான் முன்பு மெம்பராக இருந்தேன் என்றால் சரியல்ல. நாங்கள் அனைவரும் சேர்ந்து ஒரு உறவின்முறை ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் உறவின்முறைக்கு எதிராக ஏற்படுத்தியுள்ள உறவின்முறை நிர்வாகிகள் யார் என எனக்குத் தெரியாது.

(11) பழைய வழக்குகளில் பிரதிவாதிகள் உறவின்முறைக்கு எதிரே உள்ள உறவின்முறையினர் நீதிமன்றத்தில் சாட்சியமளித்துள்ளனர் ஆனால் நான் இவ்வழக்கில் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால்

சரியல்ல. திருமணமண்டபம் பூட்டுபோடப்பட்டு சாவி RDO விடம் உள்ளதாக எதனடிப்படையில் சொல்லியுள்ளேன் என்றால் தெரியாது. தற்போதுவரை திருமணமண்டபத்தை பிரதிவாதிகள் வகையறாதான் புழங்கிவருகிறார்கள் என்றால் சரியல்ல பூட்டிக்கிடக்கிறது என சாட்சி கூறுகிறார். தாவாச்சொத்தில் எனக்கு எந்த பாத்தியமும், அனுபவமும் கிடையாது என்றாலும், நான் உறுப்பினராக இருக்கிற போட்டி சங்கத்தினருக்கு ஆதரவாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S